சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 15.07.2019

## சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் ஆனி மாதம் 30–ம் நாள் (ஜீலை திங்கள் 15–ம் நாள்:– 15.07.2019) திங்கள் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22, முதலியார் தெரு, அங்கு விலாஸ் ரைஸ்மில் தெரு மற்றும் முத்துராக்கு சந்து ஆகிய பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான மெயின் சாலை மட்டத்திற்கு சாலையினை உயர்த்தி கால்வாய் கட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2232/2019/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **658, நாள்.15.07.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகர்ப்பகுதி விரிவடைந்து கொண்டே செல்வதால் அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997இன்படி சின்னமனூர் நகராட்சிக்கு துப்புரவு பணியாளர்களின் அளவுகோல் 164 ஆகும். மேலும் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் 82 ஆகும். நாளது தேதியில் பணியிடை மரணமடைந்த, வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற மற்றும் பணி மாறுதலில் வேறு நகராட்சிக்குச் சென்ற துப்புரவு பணியாளர் போக எஞ்சிய பணியில் உள்ள துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 59 ஆகும். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 22.11.2018ம் நாளிட்ட ந.க.எண்.28369/ஜே3/2018 எண் செயல்முறைகளின்படி 49 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வலுவலக ந.க.எண்.2060/2019/எச்1, நாள்.03.06.2019 கடிதத்தின்படி 50 எண்ணம் துப்புரவு பணியாளர்களை மூன்று ஆண்டுகள் தனியார் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் விலை விகிதத்தில் துப்புரவுப் பணிக்கு வைத்துக் கொள்ள கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை நல்லமுறையில் திறம்பட மேற்கொள்ளவும் நகர்ப்பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் தேங்கியுள்ள சேர் சகதிகளை தூர்வாரவும் 2016 ஆம் வருடாந்திய திடக்கழிவு மேலாண்மை விதிகளை அமல்படுத்தவும் தினந்தோறும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளவும், பொது சுகாதார நலன் கருதி குறைவான பணியாளர்களை கொண்டு நிறைவான பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால் அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நாள்.30.04.1997இன்படி பற்றாக்குறையாக உள்ள துப்புரவுப் பணியாளர்களை தனியார் மூலம் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்யும் தினக்கூலி அடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவு வரும் வரை அல்லது டிசம்பர் – 2019 மாதம் வரை அரசு விதிகளுக்கு உட்பட்டு பணியமர்த்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | பொது சுகாதார நலன், மற்றும் அவசர அவசியம் கருதி 50 எண்ணம் தனியார் துப்புரவு பணியாளர்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அனுமதி வரும் வரை அல்லது டிசம்பர்–2019 மாதம் முடிய தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை கடந்தாண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணியமர்த்திக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| தீர்மான எண், நாள் | 659, நாள்.15.07.2019 |
| தீர்மானம் | அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

*******

## பொருள் எண்.03

சின்னமனூர் தேர்வு நிலை பேரூராட்சி 01.04.1977 முதல் 3 ஆம் நிலை நகராட்சியாகவும், 29.03.1984 முதல் 2 ஆம் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு, தொடர்ந்து நாளது தேதிவரை இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 42305 ஆகும். நகராட்சியின் பரப்பளவு 25.95 சதுர கிலோ மீட்டராகும். நகர்ப்பகுதி 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நகரில் வசிக்கும் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் பெரியாற்றிலிருந்து பெறப்பட்டு, ஒரு நாள் விட்டு ஒரு நாள் (Alternative Days) நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 118 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சிப் பகுதிகளில் பதிக்கப்பட்டுள்ள பிரதானக் குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு 40 ஆண்டுகளுக்கு மேல் ஆன நிலையில் மேற்படி குழாய்கள் நல்ல நிலையில் இல்லை. மேலும் பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறையில் உள்ள நகராட்சிகளில் 135 LPCD குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பது அரசு உத்திரவாகும். அதன்படி குடிநீர் விநியோகம் செய்வதற்கு, நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பழுதடைந்துள்ள பழைய குழாய்களை மாற்றியமைத்து புதிய குழாய்கள் பதிக்க வேண்டும். அதற்குரிய முறையாக ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, கூடுதல் குடிநீர்ப் பணிக்குத் தேவையான நடவடிக்கைகள் என்னென்ன மேற்கொள்ள வேண்டும் என்பதை ஒரு ''கலந்தறிதற்குரியர்'' (Consultant) ஒருவரை சின்னமனூர் நகராட்சிக்கு அமர்த்தி, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்குமாறு (Detailed Project Report) பணிக்கக் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. அரசு உத்திரவின்படி, பாதாள சாக்கடைத் திட்டம் நடைமுறையில் உள்ள நகராட்சியில் 135 LPCD வழங்கும் பொருட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிக்கு ''கலந்தறிதற்குரியர்'' (Consultant) ஒருவரை அமர்த்த கோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

2. விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிக்கு ஏற்படும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண், நாள் 660, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.04

இந்நகராட்சியின் குடிநீர் விநியோக பணிக்கு பயன்படுத்தப்படும் திரவக்குளோரின் சிலிண்டர்கள் வாங்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.283000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2381/2011/இ2)

தீர்மான எண், நாள் 661, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.05

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அள்ள பயன்படுத்தப்படும் வாகனம் எண்.TN60T4228 என்ற டம்பர் பிளேசர் வாகனத்திற்கு செல்ப் மோட்டாரில் பழுது ஏற்பட்டதை தொடர்ந்து பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பழுதினை உடனே சரி செய்த வகையில் ஆன செலவினம் ரூ.2475/–ஐ ஓட்டுநர்(பொ) திரு.ராஜேஷ் தனது சொந்த செலவில் மேற்கொண்டதை தொடர்து மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவு மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2654/2019/எச்1)

தீர்மான எண், நாள் 662, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.06

பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN60V8239க்கு 2019–2020ம் ஆண்டிற்கான காப்பீட்டுத் பிரிமியம் தொகை ரூ.28585/–க்கு கேட்பு வரப்பெற்று அலுவலகத்திலிருந்து மேற்கண்ட தொகைக்கு காசோலை வழங்கப்பட்டு செலுத்தும் போது மேற்கண்ட வாகனத்திற்கு பிரிமியம் தொகை அதிகரிக்கப்பட்டதால் கூடுதலாக ரூ.2463/–ஐ செலுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கிணங்க அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை ஓட்டுநர்(பொ) திரு.ரமேஷ்குமார் செலுத்தியதை தொடர்ந்து அன்னார் செலவு செய்த தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவு மேற்கொண்டதை ஏற்று தொகை வழங்கலாம். (ந.க.எண்.2581/2019/எச்1)

தீர்மான எண், நாள் 663, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.07

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்படும் வாகனம் எண்.TN60S9443 என்ற காம்பாக்டர் வாகனத்தில் உள்ள 6 டயர்களும் தேய்ந்து மிகவும் மோசமாக பயன்படுத்த முடியாத சூழ்நிலையில் நகர்ப்பகுதிகளில் அன்றாடம் சேகரம் ஆகும் குப்பைகளை அகற்றுவதில் தாமதம் ஏற்படுவதுடன் பொது சுகாதார பணி பாதிக்கும் நிலை ஏற்படுகிறது. மேலும் மேற்கண்ட வாகனத்திற்கு டயர்கள் வண்டி புதியதாக வாங்கும் போது உடன் வந்தது முதல் இன்று வரை மாற்றவில்லை. எனவே வாகனத்திற்கு 6 எண்ணம் டயர்கள் வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.78000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக் குறிப்பு:–
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண், நாள் 664, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சிக்குச் சொந்தமான SRO தெருவில் கட்டப்பட்டுள்ள SRO தெரு, கடை எண்.4 திரு.கே.குப்புசாமி என்பவர் பெயரில் உள்ளது. திரு.கே.குப்புசாமி உடல் நல குறைவின் காரணத்தால் தொடர்ந்து கடையினை நடத்த முடியாத காரணத்தினாலும், அவரது பங்குத்தாரர் திரு.சீ.சுந்தரேசப் பெருமாள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2526/2019/அ2).

தீர்மான எண், நாள் 665, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.09**

இந்நகராட்சிக்குச் சொந்தமான SRO தெருவில் கட்டப்பட்ட SRO தெரு கடை எண்.8 திரு.ரா.ஜோதி மாணிக்கம் என்பவர் பெயரில் உள்ளது. திரு.ரா.ஜோதி மாணிக்கம் உடல் ஊனம் காரணமாக தொடர்ந்து கடையினை நடத்த முடியாத காரணத்தால் அவரது பங்குத்தாரர் திரு.க.கார்த்திகேயன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2525/2019/அ2).**

**தீர்மான எண், நாள்** **666, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட காலியிடத்தில் நகர்மன்றத் தீர்மான எண்.487, நாள்.28.08.2018–ல் அனுமதிக்கப்பட்டபடி தரைவாடகை அடிப்படையில் கடைகள் அமைத்து நடத்துவதற்கு 21.05.2019ம் தேதி மறு பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும்.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (தொகை) |
|---|---|---|---|
| **அ.முத்தாலம்மன் கோவில் தெரு அரசு மருத்துவமனை சுவருக்கு மேற்குப் பக்கம் தெருவிற்கு கிழக்குப் பக்கம் உள்ள காலியிடம்.** | | | |
| 1 | 3 | M.மணி, த/பெ.முத்துக் கண்ணுத்தேவர், வார்டு எண்.4, பி.டி.ஆர்.கால்வாய் தெரு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.500/– |
| **ஆ.சங்கிலியார் திடலில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி முன்புறம் உள்ள காலியிடம்** | | | |
| 1 | 2 | பெ.ராஜா, த/பெ.பெரியகாளைத் தேவர், வார்டு எண்.19, அங்குவிலாஸ் ரைஸ்மில் தெரு, எரசை ரோடு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.500/– |
| | 2 | கா.ரமேஷ், த/பெ.டி.காளை, கஸ்பா ரோடு, சின்னமனூர் | மாத வாடகை ரூ.400/– |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மேற்கண்ட இனங்களுக்கு யாரும் ஏலம் கோர முன்வரவில்லை.
2. மேற்கண்ட வ.எண்.அ–விற்கு இரண்டு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வராத நிலையில் தற்போது ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் திரு.எம்.மணி, த/பெ,முத்துக்கண்ணுத் தேவர், சின்னமனூர் உயர்ந்த பட்ச மாத வாடகை ரூ.500/– கோரியுள்ளதை மன்றம் ஏற்கலாம்.
3. வ.எண்.ஆ–விற்கு வரப்பெற்ற தரைக்கடை எண்.2க்கு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச மாத வாடகை ரூ.500/– கோரியுள்ள திரு.பெ.ராஜா த/பெ.பெரிய காளைத் தேவர் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6550/2015/அ2)

**தீர்மான எண், நாள்** **667, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

பொருள் எண்.11

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.614, நாள்.28.02.2019 ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 8 கடைகளை 21.06.2019ம் தேதி மறு முன் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில், 5 கடைக்கு மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கோர முன்வந்துள்ளனர். இதர இனங்களுக்கு எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன் வரவில்லை. வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (தொகை) |
|---|---|---|---|
| 1. | 7 | மு.பட்டன், த/பெ.முத்து, ஏர்டெல் தெரு, சீலையம்பட்டி | ரூ.2300/– |
| 2. | 9 | மு.பட்டன், த/பெ.முத்து, ஏர்டெல் தெரு, சீலையம்பட்டி | ரூ.2300/– |
| 3. | 23 | ர.ரஞ்சிதா க/பெ.எஸ்.ரவி, க.எண்.19, வார்டு எண்.3, சாமிகுளம் 3வது தெரு, சின்னமனூர் | ரூ.2300/– |
| 4. | 24 | ஆர்.ரேகா க/பெ.செல்வக்குமார், க.எண்.9பி, பெருமாள் கோவில் தெரு, எழில்நகர், சின்னமனூர். | ரூ.2300/– |
| 5. | 38A | ப.சங்கீதா க/பெ.பரமானந்தன், நடுத் தெரு, முத்துலாபுரம் | ரூ.2250/– |
| | 38A | ம.கதிரேசன், த/பெ.மாயாண்டித் தேவர், மேற்குத் தெரு, ஊத்துப்பட்டி | ரூ.2000/– |

அலுவலகக் குறிப்பு:–

1. கடை எண்.7,9,23 மற்றும் 24க்கு 13 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வராத நிலையில் தற்போது ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் திரு.மு.பட்டன் த/பெ.முத்து, திருமதி.ர.ரஞ்சிதா க/பெ.ரவி, ஆர்.ரேகா க/பெ.செல்வக்குமார் உயர்ந்த பட்ச மாத வாடகை ரூ.2300/– கோரியுள்ளதை மன்றம் ஏற்கலாம்.
2. கடை எண்.38Aக்கு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச மாத வாடகை ரூ.2250/– கோரியுள்ள திருமதி.ப.சங்கீதா க/பெ.பரமானந்தன் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.370/2017/அ2)

தீர்மான எண், நாள் 668, நாள்.15.07.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.12

சின்னமனூர் நகராட்சி 27வது வார்டில் உள்ள பள்ளிக்கோட்டைபட்டியில் கட்டப்பட்டுள்ள பள்ளி அங்கன்வாடி மையத்தின் மேற்கூரை மாற்றி, புதிய RCC கூரை அமைக்கவும், காந்தி நகர் காலனி மற்றும் வாட்டர் டேங்க் அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தில் சுற்றுச் சுவர் மற்றும் வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளவும் மற்றும் கல்யாண மண்டபம் பள்ளியில் உள்ள தரைத்தளம், மின் இணைப்பு, கழிவறை கதவுகள் அமைக்கும் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.4.00 இலட்சத்தில் பொது நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி இந்நகர்மன்றத்தின் 24.10.2018ம் நாளிட்ட 497 ஆம் எண் தீர்மானத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

பொது நிதியில் போதிய நிதியின்மையாலும், பணியாளர்களுக்கு ஊதியம் வழஙகவே இயலாத நிலை உள்ளதாலும், மேற்கண்ட பணிகள் அனைத்தும் பள்ளிகள் மற்றும் அஙகன்வாடி மையம் தொடர்புடையதாக உள்ளதாலும் மேற்படி செலவினத்தினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | மன்றம் அனுமதிக்கலாம். |
| **தீர்மான எண், நாள்** | **669, நாள்.15.07.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.13

இந்நகராட்சியின் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், நீர் உறிஞ்சும் கிணறுகள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து. கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**1) அ) குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 15 HP Motor Repair Works செய்தல் (1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. கே.வனராஜ் | ரூ.15850/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.13285/– |

**ஆ) குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள 15 HP Motor Repair Works செய்தல் (1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. கே.வனராஜ் | ரூ.13150/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.12881/– |

**2) அ) தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 7.5. HP மோட்டார் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணி (1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. கே.வனராஜ் | ரூ.16500/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.15825/– |

**ஆ) தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 7.5. HP மோட்டார் பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணி (1 எண்ணம்)**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. கே.வனராஜ் | ரூ.11250/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.10900/– |

**3) 1. HP Single Phase Mini Power Pump பழுதடைந்துள்ளதை சரி செய்யும் பணி**

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. கே.வனராஜ் | ரூ.3920/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன் | ரூ.3834/– |

**அலுவலகக் குறிப்பு:–** **1.** வரிசை எண். 2–ல் காணும் குறைவான விலைப்புள்ளி கோரிய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**2.** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6130/2016/இ2)

**தீர்மான எண், நாள்** **670, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.14

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவு, ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுது நீக்கம், தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம், தண்ணீர் தொட்டிகளில் உள்ள குழாய்களில் ஏற்படும் பழுது நீக்கம் போன்ற பணிகள் (ஜனவரி 2019 முதல் ஜீன் 2019 வரை) நகர்மன்றத் தீர்மான எண்.546, நாள். 14.12.2019இல் குடிநீர் வடிகால் நிதியில் ரூ.9.90/– இலட்சம் செலவினம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மே 2019 மாதம் வரை இப்பணிக்கு செலவினம் ரூ.9.12 இலட்சம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜீன் 2019 மாதத்திற்கான கூடுதல் செலவினத் தொகை ரூ.115000/–க்கு (ரூபாய் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொள்ளப்பட்டதில் ஆன கூடுதல் செலவினத்தை மன்றம் ஏற்கலாம். மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம்.**

**3. கூடுதல் செலவினத்தை மன்றத்திற்கு பொருள் வைக்க நிர்வாக அனுமதி பெறுவதில் கால தாமதம் ஏற்படுவதால் இப்பணிக்கு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நகராட்சி ஆணையாயர் (ம) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அஙகீகரிக்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2).**

**தீர்மான எண், நாள்** **671, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் குடிநீர் கசிவு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் ஏற்படும் பழுது நீக்கம், தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தண்ணீர் தொட்டிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணி மற்றும் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் காவல் பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 02.07.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி

அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.053% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 1.31% மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த (0.053%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
**2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியுள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2).**

**தீர்மான எண், நாள்** **672, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.16

இந்நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குளோரின் சிலிண்டர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக ந.க.எண்.2381/2011/இ2, நாள்.25.06.2019ன்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | சத்யா டைஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | ரூ.22500/– |
| 2. | பியூப்பில் கெமிக்கல்ஸ் & இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | ரூ.23200/– |

**அலுவலகக் குறிப்பு:–** **வரிசை எண். 1ல் காணும் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2381/2011/இ2)**

**தீர்மான எண், நாள்** **673, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள கழிவு நீர் கால்வாய் உடைந்து கழிவு நீர் செல்ல முடியாமல் அடைப்பு ஏற்பட்டதை சரி செய்ய மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு 20.06.2019ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.60% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 1.25% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்.

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.60%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **674, நாள்.15.07.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.18**

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு, மரம் நடுதல் மற்றும் சில பழுதுகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மழைநீர் சேகரம் அமைப்பின் அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2711/2019/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **675, நாள்.15.07.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.19

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலைய முன்புறம் சாலையோர வியாபாரிகளின் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் பொருட்டு தடுப்புகள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் பார்க் வடிவில் அழகுப்படுத்தும் பணிக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 22.02.2019ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தகாரர் – 0.50% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்தகாரர் – 1.25% மதிப்பீட்டைவிட அதிகம்.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.50% ) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**<br>**2. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5646–2/2018/இ1).** |
| தீர்மான எண், நாள் | **676, நாள்.15.07.2019** |
| தீர்மானம் | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் இடதுபுறம் மற்றும் பின்புறம் உள்ள சுற்றுச் சுவரினை உயர்த்தி கட்ட ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 22.02.2019ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தகாரர் – 0.60% மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்தகாரர் – 1.40% மதிப்பீட்டைவிட அதிகம்.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.60%) திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**<br>**2. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியுள்ளதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5646–3/2018/இ1)** |
| தீர்மான எண், நாள் | **677, நாள்.15.07.2019** |
| தீர்மானம் | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.21**

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம், அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலக கட்டிடம் ஆகிய இடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2712/2019/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **678, நாள்.15.07.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.22**

இந்நகராட்சி வார்டு எண்.13, விநாயகர் கோவில் தெருவில் IHHL திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டிய 41 நபர்களுக்கு பாதாள சாக்கடைக்கான மெயின் குழாய் மற்றும் Manhole இல்லாத காரணத்தினால் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. எனவே மேற்கண்ட தெருவில் புதிய மெயின் குழாய் மற்றும் Manhole அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.34 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.4229/2002/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **679, நாள்.15.07.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******